## ஏப்ரல் – 11

**"களியாட்டும் வெறியும் உள்ளவர்களாய் நடவாமல், சீராய் நடக்கக்கடவோம்."**

**- ரோம 13 : 13**

சிலருக்கு பணம், செல்வம் இவைகளுக்காக வெறி ஏற்படுகிறது. மற்றவர்களுக்கு தொழிலுக்காக வெறி, மற்றவர்களுக்கு உடைக்காக, மற்றவர்களுக்கு சங்கீதத்திற்காக, மற்றவர்களுக்கு கலைக்காக ஆனால், புதிய நாளைப்பற்றியும், அந்த நாளில் நிறைவேற்றப்பட வேண்டிய தேவனுடைய மிகப்பெரிய வேலையைப் பற்றியுள்ள சுருக்கமான தெய்வீக வெளிப்படுத்துதலைக் கண்டு கொண்டிருக்கிற கர்த்தரின் பிள்ளைகளாகிய நமக்கு, இந்த காரியங்கள் நம்முடைய கவனத்திற்கும் போக்கிற்கும் தூரமாயிருக்கத் தக்கதாக, நமது இருதயம் தேவனுடைய வேலையில் அவ்வளவு தூரம் ஈடுபட்டிருக்க வேண்டும்! இந்தக் காரியங்கள் உலகத்திற்குரிய மற்றவர்களுக்குத் தகுதியானதாகவும், சரியானதாகவும் எண்ணப்படலாம். ஏனென்றால், அவர்கள் நாம் இருக்கிறது போல, விழிப்புள்ளவர்களாக இல்ல. நாம் பார்க்கிற பிரகாரமாக அவர்கள் பார்க்கிறதுமில்லை. **-Z ’03, 123 (R 3179).**

* * * * *

கிறிஸ்தவன் தன் வழிகளில் கவனமாயிருந்தாலொழிய, அவன் வஞ்சகத்திலும், பாவத்திலும், சுயநலத்திலும், உலகத்தனத்திலும் வெறி கொண்டவனாகி விடுவான். இப்படிப்பட்ட வெறி தவிர்க்கக் கூடாதபடி, ஆவிக்குரிய களியாட்டுக்கு நடத்துகிறது. அதில் எல்லா சட்டமும், ஒழுங்கும் மறக்கப்படுகின்றன. அவனுடைய வழிகளில் வருகிறவர்களின் ஆவிக்குரிய ஜீவனிலும், அவயத்திலும் பலாத்காரம் பிரயோகிக்கப்படுகிறது. அவனுடைய போக்கில் அடிக்கடி அழிவு காணப்படுகிறது. தெய்வீக சட்டத்தின் பலத்தக்கை இந்தக் களியாட்டை இரண்டாம் மரணத்தில் ஒழித்துப் போடும். **-P ’35, 61.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

நீதி 23:20; லூக் 21:34; 1பேது 4:3; ரோம 8:29; 1கொரி 6:9; 1பேது 2:11,21,22; கலா 5:16-26; 6:18; எபே 5:5,11,14,16; கொலோ 3:8-10,12.

**கோபுர வாசிப்பு : Z ’13, 323 (R 5338).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரம் என்னுடைய அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றால் ஏற்பட்ட பலன் என்ன?